DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆனந்தராஜ் | Caste | : | |
| Father Name | : | அழகப்பன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **20.09.2025.**

**PW - 12**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டம், நமனசமுத்திரம் காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்தேன். அந்த காவல்நிலையத்தில் கணினி பதிவு செய்யும் பொறுப்பில் பணிபுரிந்தேன். துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 @ 302 வழக்கில் துவரங்குறிச்சி வட்ட ஆய்வாளருக்கு சாட்சிகள் விசாரணையின்போதும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியபோதும் உடனிருந்து அந்த வாக்குமூலங்களை ஆய்வாளர் சொல்ல சொல்ல மடிக்கணினியில் பதிவு செய்து சம்பவ இடத்திலேயே பதிவிறக்கம் செய்து ஆய்வாளரிடம் கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், ஆய்வாளர் பின்னிட்டு என்னிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க வாக்குமூலங்களை கணினியில் காவல்நிலையத்திலேயே தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்துக் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.